ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2459/12 - 2025 ඔක්තෝබර් මස 21 වැනි අඟහරුවාදා - 2025.10.21

*2459/12 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

கட்டளை இலக்கம் - 94

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**
(திருத்தியமைக்கப்பட்டது)

20(5) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 20(5) இன் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, கீழே தரப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வகைகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் கூடுதலான சில்லறை விலைக்கு மேலாக இறக்குமதியாளர், வழங்குநர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரி எவரும் விற்பனை செய்யவோ, வழங்கவோ, விற்பனைக்கு விடவோ அல்லது விற்பனைக்கு வெளிப்படுத்தவோ, விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ முடியாதென கட்டளையிடுகின்றது.

| *வகை* | *ஆகக்கூடுதலான சில்லறை விலை* |
|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட பச்சை அரிசி | கி.கிராம் ஒன்று ரூபா 210.00 |
| இறக்குமதி செய்யப்பட்ட நாட்டரிசி | கி.கிராம் ஒன்று ரூபா 220.00 |
| இறக்குமதி செய்யப்பட்ட சம்பா அரிசி | கி.கிராம் ஒன்று ரூபா 230.00 |
| இறக்குமதி செய்யப்பட்ட பொன்னி சம்பா - GR 11 (கீரி சம்பாவுக்கு சமமானது) | கி.கிராம் ஒன்று ரூபா 240.00 |
| இறக்குமதி செய்யப்பட்டகீரி பொன்னி அல்லது பால் பொன்னி - GR 11 | கி.கிராம் ஒன்று ரூபா 255.00 |



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, 2024, திசெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 2414/04 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 91 ஆம் இலக்க கட்டளையை இக்கட்டளையினால் இரத்துச் செய்கின்றது.

இக்கட்டளை 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

**ஹேமந்த சமரகோன்,**
தவிசாளர்.

கொழும்பு,
2025, ஒற்றோபர் 21.

EOG 10-0203